சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.963/2011

ம.சா.1

நாள். 30.01.2025.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சின்னசாமி | மதம்: | இந்து |
| தகப்பனார்/ கணவர் பெயர்: | ராமகவுண்டர் | ஜாதி: | --- |
| கிராமம்: | வெள்ளாளப்பட்டி | வேலை: | --- |
| வட்டம்: | ஊத்தங்கரை | வயது: | --- |

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். அதில் கண்டுள்ள சான்றாவணங்களின் பட்டியலில் வரிசை எண் 1 முதல் 5, 7, 8 வரையிலான ஆவணங்கள் முறையே ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சேலம் புதிய பேருந்து நிலையத்திற்குள் நடைபெற்றது என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்குள் பேருந்து மெதுவாக சென்ற போது நான் தான் தீடிரென்று குறுக்கே வந்து விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. அரசு பேருந்தின் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாக தான் பேருந்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு

ரூ.4,00,000/-க்கு மேல் மருத்துவ மற்றும் இதர செலவுகள் ஏற்பட்டதாக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. செயற்கை கால் பொருத்துவதற்கு ரூ.3 லட்சத்திற்கு மேல் செலவாகும் என நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தின் போது எனது வேலை, வயது, வருமானம் ஆகியவற்றை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஒப்பந்த அடிப்படையில் மேஸ்திரி வேலை பார்த்து மாதம் ரூ.10 ஆயிரம் சம்பளம் வாங்கியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சின்னசாமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.